# கிங்ஸ்டன் கல்லூரியில் புது ஆய்வகம் திறப்பு

வேலூர், அக். 16–

காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியில், 'இன்னொவேஷன் டே–2019' மற்றும் மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான ஒருங்கிணைந்த ஆய்வகம் திறப்பு விழா நடந்தது.

நிகழ்ச்சிக்கு, கிங்ஸ்டன் கல்விக்குழும தலைவரும், வேலூர் எம்பியுமான கதிர் ஆனந்த் தலைமை வகித்தார். முதல்வர் ரவிகுமார் வரவேற்றார். இஸ்ரோ விஞ்ஞானியும், சந்திரயான் முன்னால் திட்ட இயக்குனருமான மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்று பேசுகையில், "மாணவர்கள் ஆர்வத்தோடும், புது சிந்தனையுடன் மற்றும் குழுவாகவும் சேர்ந்து படித்தால், அவர்களும் ஐஐடியில் பயிலும் மாணவர்களை போல் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்' என்று குறிப்பிட்டார். தொடர்ந்து, மாணவர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார்.

நிகழ்ச்சியில், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் பங்கேற்றனர். கிங்ஸ்டன் வேலை வாய்ப்பு துறை இயக்குனர் திங்கள்செல்வன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை, மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு துறைத் தலைவர் செந்தில்குமார் செய்திருந்தார்.




காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியில், மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான ஒருங்கிணைந்த ஆய்வகம் திறப்பு விழா நடந்தது. இதில், சிறப்பு விருந்தினராக சந்திரயான் முன்னாள் திட்ட இயக்குனரும், இஸ்ரோ விஞ்ஞானியுமான மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்று பேசினார். அருகில், கல்லூரி முதல்வர் ரவிக்குமார், மின்னணுவியல் மற்றும் தகவல்தொடர்பு துறை தலைவர் செந்தில்குமார், வேலைவாய்ப்பு இயக்குனர் திங்கள்செல்வன் ஆகியோர்.

# தொழிலக பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் அலுவலக உதவியாளர் பணி விண்ணப்பம்

## அக்.31க்குள் விண்ணப்பிக்க கெடு

வேலூர், அக். 16–

வேலூரில் இயங்கிவரும் தொழிலக பாது